செ. வெ. எண்:-721

நாள் 05-12-2011

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொதுக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களையும், நிர்வாக குழுவிற்கு மூன்று உறுப்பினர்களையும் புதிதாக நியமனம் செய்து மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் இன்று (5-12-2011) ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு இசையமைப்பாளர் திரு தேவா அவர்களை தலைவராகவும், குமாரி சச்சு அவர்களை உறுப்பினர்-செயலர் ஆகவும் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் ஏற்கனவே நியமனம் செய்து, அவர்கள் இயல் இசை நாடக மன்றத்தின் பணிகளை செய்து வருகின்றனர்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொதுக் குழுவிற்கு கீழ்கண்ட ஒன்பது உறுப்பினர்களை புதிதாக நியமனம் செய்து மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் இன்று (5-12-2011) ஆணையிட்டுள்ளார்கள்.

**<u>பொதுக்குழுவின் புதிய உறுப்பினர்கள்</u>**

1) திரு V. S. ராகவன்
2) திருமதி வாணி ஜெயராம்
3) திருமதி நித்யஸ்ரீ மகாதேவன்
4) திருமதி கிருஷ்ணகுமாரி நரேந்திரன்
5) திருமதி ஜெயந்தி கண்ணப்பன்
6) திரு S. வரதராஜன்
7) திரு பிரபு (செயலர், ஸ்ரீகிருஷ்ண கான சபா)
8) திரு மக்கள் குரல் ராம்ஜி
9) திரு மாதவபெத்தி மூர்த்தி

மேலும் இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர்-செயலர் மற்றும் நிதித் துறை செயலர் அல்லது அவரது பிரதிநிதி ஆகியோர் பொதுக்குழுவில் அலுவல் சார் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

இயல் இசை நாடக மன்றத்தின் நிர்வாகக் குழுவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் கீழ்கண்ட மூன்று உறுப்பினர்களை புதிதாக நியமனம் செய்து இன்று ஆணையிட்டுள்ளார்கள்.

**<u>நிர்வாகக் குழுவின் புதிய உறுப்பினர்கள்</u>**

1) திரு V. S. ராகவன்
2) திருமதி வாணி ஜெயராம்
3) திருமதி கிருஷ்ணகுமாரி நரேந்திரன்

மேலும் இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர்-செயலர் மற்றும் நிதித் துறை செயலர் அல்லது அவரது பிரதிநிதி ஆகியோர் நிர்வாகக் குழுவில் அலுவல் சார் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

மேற்படி நியமனம் செய்யப்பட்டுள்ள பொதுக் குழு உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மூன்று வருட காலம் உறுப்பினர் பதவியில் இருப்பார்கள்.

அரசு முதன்மைச் செயலர்,
சுற்றுலா (ம) பண்பாட்டுத் துறை.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9